Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, மே 12, 2024 | இதழ் 29

தமிழகம் முழுவதும் நலத்திட்ட உதவிகள், அன்னதானம் எடப்பாடி 70-வது பிறந்த நாள்: நடிகர் விஜய், அண்ணாமலை வாழ்த்து தொண்டர்களுடன் 70 கிலோ கேக் வெட்டினார்

சென்னை, 12 மே 2024: முன்னாள் முதலமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தனது 70-வது பிறந்தநாளை இன்று கொண்டாடி வருகிறார். அவருக்கு அண்ணா தி.மு.க. நிர்வாகிகளும், தொண்டர்களும் சால்வை, பூங்கொத்து வழங்கி வருகிறார்கள்.

அவரது பிறந்தநாளை தமிழகம் முழுவதும் உள்ள அண்ணா தி.மு.க.வினர் நலத்திட்ட உதவிகள், அன்னதானம் வழங்கி சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

அண்ணா தி.மு.க.நிர்வாகிகள், தொண்டர்கள் கட்சி கொடியேற்றி இனிப்பு வழங்கி கொண்டாடினர். மேலும் பல்வேறு கோவில்களிலும் சிறப்பு வழிபாடு செய்து பொது மக்களுக்கு அன்னதானம், நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

எடப்பாடி பழனிசாமி பிறந்த நாளையொட்டி சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது வீட்டில் நேற்று முதலே தொண்டர்கள் கட்சியின் மூத்த நிர்வாகிகள் திரண்டு வந்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

சேலம் திருவாக்கவுண்டனூரில் உள்ள தனது இல்லத்தில் அண்ணா தி.மு.க. கட்சி நிர்வாகிகளுடன் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி 70 கிலோ கேக் வெட்டி கொண்டாடினார். எடப்பாடி பழனிசாமிக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் சமூக ஊடகங்களில் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

விஜய், அண்ணாமலை

நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய்யின் எக்ஸ் தளப் பதிவில், "அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமிக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்." என்று தெரிவித்தார்..

பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில், "தமிழக முன்னாள் முதலமைச்சரும் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமிக்கு, இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர், நல்ல உடல் நலத்துடன், நீண்ட ஆயுளுடன் மக்கள் பணி தொடர வேண்டிக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

இன்று காலை முதலே எடப்பாடி பழனிசாமி வீட்டிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கட்சியின் மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், தொண்டர்கள், திரண்டு வந்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இதனால் எடப்பாடி பழனிசாமி வீடு அமைந்துள்ள நெடுஞ்சாலை நகர் பகுதி திருவிழாக் கோலம் பூண்டுள்ளது. எங்கு பார்த்தாலும் அண்ணா தி.மு.க. தொண்டர்கள் உற்சாகத்தில் இருந்தனர்.

தொண்டர்கள் கொண்டு வந்த கேக்குகளை எடப்பாடி பழனிசாமி வெட்டினார். அவருக்கு அண்ணா தி.மு.க.வினர் ஆளுயர மாலை அணிவித்து மகிழ்ந்து அவருடன் போட்டோ எடுத்து கொண்டனர்.

எடப்பாடி பழனிசாமிக்கு அண்ணா தி.மு.க. அவைத் தலைவர் டாக்டர் தமிழ்மகன் உசேன், அமைப்பு செயலாளர் தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் காமராஜ் எம்.எல்.ஏ., டாக்டர் சி விஜயபாஸ்கர் எம்.எல்.ஏ., விஜயபாஸ்கர், கே.பி.அன்பழகன், அண்ணா தி.மு.க. தொழிற்சங்க பேரவை செயலாளர் கமலக்கண்ணன், முன்னாள் அமைச்சரும், அமைப்பு செயலாளருமான முக்கூர் சுப்பிரமணியன்,

அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் பா.கணேசன், முன்னாள் அமைச்சர்கள் சோமசுந்தரம், மாதவரம் மூர்த்தி, ரவி எம்.எல்.ஏ., சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் கே.பி.கந்தன், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் தூசி கே.மோகன், ராணிபேட்டை மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.சுகுமார், அண்ணா தி.மு.க. செய்தி தொடர்பாளர்கள் சசிரேகா, ஆவடி குமார், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் புரசை வி.எஸ்.பாபு, ஜெயலலிதா பேரவை துணைச் செயலாளர் பெரும்பாக்கம் ராஜசேகர்,

இலக்கிய அணி இணைச் செயலாளர் டி.சிவராஜ், வர்த்தக அணி இணைச்செயலாளர் வி.பன்னீர் செல்வம், மாணவரணி துணைச் செயலாளர் சல்மான் ஜாவித், திருவள்ளூர் மத்திய மாவட்ட பொருளாளர் சி.ஒய்.ஜாவித் அஹமத், அண்ணா தொழிற்சங்க பேரவை இணைச் செயலாளர் கோ.சூரியமூர்த்தி, மாணவரணி துணைச் செயலாளர் கோவிலம்பாக்கம் சி.மணிமாறன், முன்னாள் எம்.எல்.ஏ., சத்யா பன்னீர்செல்வம்,

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் வீரபாண்டியன், தென்சென்னை வடக்கு (மேற்கு) மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஏ.ஏ.அர்ஜுனன், மாநகர போக்குவரத்து தெற்கு மண்டல அண்ணா தொழிற் சங்க செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், ஆயிரம்விளக்கு தெற்கு பகுதி வட்ட செயலாளர் பி.ஆறுமுகம் என்கிற சின்னையன், வக்கீல் சிம்லா முத்துசோழன் உள்ளிட்ட ஏராளமானோர் வாழ்த்து தெரிவித்தனர்.

மகாபலிபுரம் சேர்மன் ராகவன் எடப்பாடி பழனிசாமி 70 வது பிறந்தநாளையொட்டி 70 கிலோ எடையில் பிரம்மாண்ட கேக் கொண்டுவந்தார். இதேபோல் மேச்சேரி கிழக்கு பேரவை செயலாளர் ராஜாவும் 70 கிலோவில் பிரம்மாண்ட கேக் கொண்டு வந்திருந்தார். இதே போல் மேச்சேரி பேரூர் செயலாளர் சி.ஜெ.குமார் 70 கிலோவில் பிரம்மாண்ட கேக் கொண்டு வந்திருந்தனர். இந்த கேக்குகளை எடப்பாடி பழனிசாமி வெட்டி தொண்டர்களுக்கு வழங்கினார்.

கூகுள் மேப் பார்த்து ஓட்டியதால் விபரீதம் வீட்டு வாசலில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது காரை ஏற்றிய பெண்: 7 பேர் படுகாயம் உறவினர் வீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்தவர்களுக்கு நேர்ந்த துயரம்

சென்னை, 12 மே 2024: அசோக் நகர் அருகே இன்று அதிகாலை வீட்டு வாசலில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது கார் ஏறியதில் 7 பேர் காயமடைந்தனர்.

சென்னை அசோக் நகர் 10-வது தெருவில் வசித்து வருபவர் மாரியப்பன். இவரது மனைவி சரிதா. இவர்களது வீட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக உறவினர்கள் பலர் வீட்டுக்கு வந்து இருந்தனர். நேற்று இரவு அனைவரும் வீட்டுக்குள் தூங்குவதற்கு இடவசதி இல்லாததால் சரிதா, உறவினர்கள் தில்லைநாயகி, மூதாட்டி ஜோதி, கவுதம் நிஷா உள்ளிட்ட பலர் வீட்டுக்கு வெளியே பாயை விரித்து தூங்கினர்.

இன்று அதிகாலை 5 மணி அளவில் 10-வது தெருவுக்குள் கார் ஒன்று வந்தது. திடீரென அந்த கார் அதிவேகமாக வீட்டின் வெளியே தூங்கிக்கொண்டு இருந்த சரிதா உள்ளிட்ட7 பேர் மீது ஏறியது. கார் ஏற்றி நசுக்கியதில் 7 பேரின் கால்களும் நசுங்கின. இதனால் வலி தாங்க முடியாமல் அலறி துடித்தனர். இதில் 4 பேர் பெண்கள் ஆவர்.அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் வந்து பார்த்தபோது கார் நசுக்கியதால் 7 பேர் காயம் அடைந்து இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு காயம் அடைந்த அனைவரும் ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கார் ஏறியதில் சரிதா, தில்லை நாயகி ஆகிய 2 பெண்களின் கால்களிலும் எலும்புகள் உடைந்துள்ளன. இது பற்றி கேள்விப்பட்டதும் கிண்டி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

அப்போது குறுகலான சந்தில் காரை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியது மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த வைசாலி பாட்டீல் என்பது தெரிய வந்தது. சென்னையில் உறவினர் வீட்டுக்கு வந்திருந்த அவர் இன்று அதிகாலை கூகுள் மேப்பை பார்த்து காரை ஓட்டிச் சென்றது தெரிய வந்தது. கூகுள் மேப் காட்டிய வழியில் குறுகலான குடியிருப்பு பகுதியில் சந்து இருப்பது தெரியாமலேயே வைசாலி காரை ஓட்டிச் சென்று உள்ளார். அப்போது வீட்டு முன்பு தூங்கியவர்கள் மீது ஏற்றியது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்நிலையில் கூகுள் மேப்பை நம்பி சென்று முட்டுச்சந்தில் விபத்தை ஏற்படுத்திய வடமாநிலப் பெண் வைஷாலி பாட்டீல் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது அஜாக்கிரதை, அதிவேகமாக வாகனத்தை ஓட்டுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிற்றுக்கிழமை,
மே 12, 2024

96 தொகுதிகளில் நாளை 4ம் கட்ட வாக்குப்பதிவு
ஆந்திரா, ஒடிசா சட்டசபைக்கும் தேர்தல்

சென்னை, 12 மே 2024: ஆந்திரா, தெலுங்கானா உட்பட 9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 தொகுதிகளில் நாளை 4ம் கட்ட நாடாளுமன்ற தேர்தல் நடக்கிறது.

நாடு முழுவதும் 7 கட்டங்களாக நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படுகிறது. கடந்த ஏப்ரல் 19, 26, மே 7 ஆகிய தேதிகளில் 3 கட்ட தேர்தல்கள் நிறைவடைந்து உள்ளன. 4ம் கட்டமாக 9 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதன்படி ஆந்திராவில் மொத்தமுள்ள 25, தெலுங்கானாவின் 17 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடக்கிறது. ஒடிசாவில் 4, பிகாரில் 5, ஜார்க்கண்டில் 4, மத்திய பிரதேசத்தில் 8, மகாராஷ்டிராவில் 11, உத்தர பிரதேசத்தில் 13, மேற்கு வங்கத்தில் 8, காஷ்மீரில் ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு தேர்தல் நடக்கிறது.

இந்த தேர்தலில் 170 பெண்கள் உள்பட மொத்தம் 1,717 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இவர்களில் முக்கியமானவர்களாக உத்தர பிரதேசத்தின் கன்னோஜ் தொகுதியில் சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பாஜக சார்பில் சுப்ரதா பதக் களத்தில் உள்ளார்.

மேற்குவங்கத்தின் கிருஷ்ணாநகர் தொகுதியில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் சார்பில் மஹுவா மொய்த்ராவும் பாஜக சார்பில் அம்ரிதா ராயும் போட்டியிடுகின்றனர்.

மேற்குவங்கத்தின் பகரம்பூரில் ஆளும் திரிணமூல் சார்பில் கிரிக்கெட் வீரர் யூசுப் பதான் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, பாஜக சார்பில் நிர்மல் சந்திர சகா ஆகியோர் களத்தில் உள்ளனர்.

பிகாரின் பெகுசராய் தொகுதியில் மத்திய அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான கிரிராஜ் சிங் களமிறங்கி உள்ளார். அவரை எதிர்த்து இந்தியா கூட்டணி சார்பில் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் அவதேஷ் ராய் போட்டியிடுகிறார். தெலுங்கானாவின் ஐதராபாத் நாடாளுமன்ற தொகுதியில் ஏஐஎம்ஐஎம் கட்சியின் தலைவர் அசதுத்தீன் ஓவைஸி போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பாஜக சார்பில் நடிகை மாதவி லதா களமிறங்கி உள்ளார்.

இந்த 96 தொகுதிகளில் போட்டியிடும் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

அதேபோல் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா ஆகியோரும் பல்வேறு பகுதிகளில் பிரச்சாரம் செய்தனர். நேற்று மாலையுடன் பிரச்சாரம் ஓய்ந்தது.

இதைத்தொடர்ந்து நாளை வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முடுக்கிவிட்டது. மின்னணு வாக்குப்பதிவு யந்திரங்கள் உள்ளிட்ட பொருட்களை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன. பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு காமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பண பட்டுவாடாவை தவிர்க்க தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நாளை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்குகிறது. மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திர மாநிலத்தில் உள்ள 175 சட்டசபை தொகுதிகளுக்கும் நாளை தேர்தல் நடைபெறுகிறது. இதில் ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி புலிவந்தலா தொகுதியிலும், தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு குப்பம் தொகுதியிலும், ஜனசேனா கட்சி தலைவர் நடிகர் பவன் கல்யாண் பித்தாபுரம் தொகுதியிலும் களம் காண்கிறார்கள்.

இதேபோல் ஒடிசா மாநில சட்டசபைக்கும் முதல் கட்டமாக 28 தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அங்கு மொத்தம் 147 தொகுதிகள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்ற உத்தரவுப்படி வழிகாட்டு மதிப்பை குறையுங்கள் முத்திரைக் கட்டணத்தை
பல மடங்கு உயர்த்தி மக்கள் மீது மேலும் சுமை: எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம்

சென்னை, 12 மே 2024: மூன்றாண்டு சோதனை ஆட்சியின் பரிசாக தமிழ்நாடு முழுவதும் முத்திரைக் கட்டணத்தை திமுக அரசு உயர்த்தியுள்ளது என எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்தே தமிழ்நாட்டு மக்களுக்கு சோதனையான காலமாகவே இருந்து வருகிறது. விடியல் தரப்போகிறேன் என்று கூறி ஆட்சிக்கு வந்த ஸ்டாலின் ஆட்சி ஒரு இருண்ட ஆட்சியாகவே இருக்கிறதென்று சொன்னால் அது மிகையாகாது. திரும்பிய துறைகளில் எல்லாம் நிர்வாகத் திறமையற்று மக்கள் தலையில் பேரிடியாய் வாய்த்திருக்கின்ற இந்த அரசு, தனது மூன்றாண்டு செயலற்ற ஆட்சியின் நினைவுப் பரிசாக தமிழ்நாடு முழுவதும் முத்திரைக் கட்டணத்தை பலமடங்கு உயர்த்தியுள்ளது.

நிதி மேலாண்மை என்றால் என்னவென்றே தெரியாத ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, ஏற்கெனவே 3 ஆண்டுகளில் 3.5 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கி, மக்களை கடனாளிகள் ஆக்கியுள்ளது. அது போதாதென்று 150 சதவீதம் வரை சொத்து வரி மற்றும் வீட்டுவரி உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, 52 சதவீதம் வரை மின் கட்டண உயர்வு, குப்பை வரி உயர்வு, பால் மற்றும் பால் பொருட்கள் விலை உயர்வு என தனது நிர்வாகத் திறமையின்மையினால், மக்கள் தலையில் சுமைகளை ஏற்றியுள்ளது திமுக அரசு.

கடந்த 8.7.2023 அன்று, பதிவுத் துறையால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்களை உயர்த்தி மக்களை பெரும் சிரமத்திற்கு ஆளாக்கிய திமுக அரசு, தற்போது தமிழ்நாடு முழுவதும் முத்திரைக் கட்டணத்தை பலமடங்கு உயர்த்தி அரசாணை வெளியிட்டுள்ளது.

8.5.2024 அன்று தேதியிட்ட அரசு அறிவிக்கையின்படி, 3.5.2024 முதல் தத்து ஆவணங்கள், ஒப்பந்த ஆவணங்கள், ரத்துப் பத்திரங்கள், நகல் பத்திரங்கள், குடும்ப உறுப்பினர் பவர் பத்திரம் வழங்குதல் உள்ளிட்ட 26 சேவைகளுக்கான முத்திரைக் கட்டணங்களை 10 மடங்கு முதல் 33 மடங்கு வரை உயர்த்தியுள்ளது தி.மு.க. அரசு. இருக்கின்ற நிதியை சரிவர மேலாண்மை செய்து, புதிதாக வாங்கும் கடன்களை மூலதனச் செலவுகளாகவும், மக்கள் நலத்திட்டங்களிலும் முதலீடு செய்வதே நல்ல அரசின் இலக்கணம். அதன்படி செவ்வனே செயல்பட்ட அம்மாவின் அரசும், எனது தலைமையிலான அம்மாவின் அரசும் மக்கள் மீது சுமைகளை பெரிதும் ஏற்றாமல், பொருளாதாரத்தை உரிய குறியீடுகளுக்குள் சரிவர நிர்வகித்து வந்தது.

ஆனால், ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, அனைத்துத் துறைகளையும் முறைகேடுகளால் சீர்குலைத்து, மாநிலத்தின் நிதிநிலைமையை நிலைகுலையச் செய்து, தன் தவறுகளால் ஏற்படும் பாரத்தை, வரி மற்றும் கட்டண உயர்வுகள் மூலம் மக்கள் தலையில் பெரும் சுமையை ஏற்றுவது கடும் கண்டனத்திற்குரியது.

ஏற்கெனவே, தி.மு.க. அரசு கொண்டுவந்த வழிகாட்டு மதிப்பு உயர்த்தப்பட்டது செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை இதுவரை இந்த தி.மு.க. அரசு அமல்படுத்தவில்லை. உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு இதுவரை தடையாணை தரவில்லை.

எனவே, எவ்வித நியாயமும் இன்றி பல மடங்கு முத்திரைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெறுமாறும், சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி வழிகாட்டு மதிப்பையும் முன்பிருந்த நிலைக்குத் தொடர வேண்டும் என்றும் முதலமைச்சரை வலியுறுத்துகிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

“19 மாவட்டங்களில் இடியுடன் மழை பெய்யும்”
வானிலை ஆய்வு மையம் தலவல்

சென்னை, 12 மே 2024: தமிழகத்தில் ஒருபுறம் கத்தரி வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், மறுபுறம் மிதமான மழை பெய்து வெப்பத்தை தணித்து வருகிறது. இதற்கிடையே, தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் தமிழகத்தில் அடுத்த 3 மணி நேரத்தில் 19 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், சேலம், நாமக்கல், திண்டுக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, தென்காசி, நெல்லை, குமரி ஆகிய 19 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவடி பகுதியில் குட்கா விற்பனை செய்த
கடைகளுக்கு சீல்: கமிஷனர் சங்கர் நடவடிக்கை

சென்னை, 12 மே 2024: ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா உள்ளிட்ட போதைப்பொருட்கள் விற்பனைக்கு எதிரான தீவிர தொடர் நடவடிக்கைகள் கமிஷனர் சங்கர் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட 20 வீடுகள் மற்றும் 70க்கும் மேற்பட்ட கடைகளில் கஞ்சா மற்றும் குட்கா பொருட்கள் தொடர்பான அதிரடி சிறப்பு சோதனைகள் நடத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. காவலர்களின் எச்சரிக்கையை மீறி தொடர்ந்து குட்கா பொருட்கள் விற்பனையில் ஈடுப்பட்ட நபர்களின் மீது வழக்கு பதிவு செய்து 34 கடைகளுக்கு உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளால் மூடி சீல் வைக்கப்பட்டது. அம்பத்தூர் மற்றும் அம்பத்தூர் எஸ்டேட் எல்லைக்குட்பட்ட 3 கடைகளில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளால் மூடி சீல் வைக்கப்பட்டதை ஆவடி காவல்துறை கமிஷனர் சங்கர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

ஆவடி காவல் ஆணையரகத்தில் இந்த வருடத்தில் கஞ்சா மற்றும் குட்கா விற்பனை மீது நடவடிக்கை எடுக்க ஆவடி காவல் ஆணையாளர் உத்தரவின் பேரில் கஞ்சா விற்பனை செய்ததாக 132 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 204 நபர்கள் கைது செய்யப்பட்டு சுமார் 349 கிலோ கஞ்சா மற்றும் 12 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. தொடர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 12 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்று குட்கா விற்பனையில் ஈடுபட்டதாக 242 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 255 பேர் கைது செய்யப்பட்டு சுமார் 2628 கிலோ குட்கா பொருட்கள் மற்றும் 8 வாகனங்கள் பறிமுதல் செய்து ரூ.55 லட்சத்து 80 ஆயிரம்- அபராதம் விதிக்கப்பட்டது. தொடர்ந்து குட்கா விற்பனையில் ஈடுபட்ட 6 நபர்கள் குண்டர் தடுப்புசட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா பொருட்கள் தொடர்பான அதிரடி சோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு மேற்படி செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கமிஷனர் சங்கர் கூறியுள்ளார்.

பெண் காவலர்களை குறித்து அவதூறாக பேசிய வழக்கில்
கைதான சவுக்கு சங்கர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது

சென்னை, 12 மே 2024: பிரபல யூ டியூபர் சவுக்கு சங்கர் காவல்துறை அதிகாரிகள், பெண் போலீசார் குறித்து அவதூறாக பேசியதாக கடந்த 4-ஆம் தேதி தேனி மாவட்டத்தில் கோவை சைபர் கிரைம் போலீசாரால் கைது செய்யப்பட்டு, 5 பிரிவுகளின் கீழ் அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த கைது நடவடிக்கையின் போது கஞ்சா வைத்திருந்ததாக சவுக்கு சங்கர் உள்ளிட்ட 3 பேர் மீது தேனி பழனி செட்டிபட்டி போலீஸார் வழக்கு பதிந்தனர். இதனையடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து சென்னை மதுரவாயல் பகுதியில் உள்ள அவரது இல்லம் மற்றும் தியாகராய நகரில் உள்ள அலுவலகம் ஆகிய இடங்களில் தேனி மாவட்ட பழனிச்செட்டி காவல் நிலைய ஆய்வாளர் பார்த்திபன் தலைமையிலான குழுவினர் சோதனை மேற்கொண்டனர். சவுக்கு சங்கர் தங்கியிருந்த அறையில் கார் ஓட்டுநர் இருவர் கஞ்சா பதுக்கி வைத்திருந்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில், அது தொடர்பாக இந்த சோதனை நடத்தப்படுவதாக தகவல் வெளியானது. சென்னை பெருநகர வளா□ச்சிக் குழுமத்தின் ஆவணங்களை போலியாகத் தயாரித்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் குறித்து அவதூறு பரப்பியதாக அளிக்கப்பட்ட புகாரில் சவுக்கு சங்கர் மீது மேலும் ஒரு வழக்கை சென்னை சைபர் குற்றப் பிரிவு போலீஸார் நேற்று முன்தினம் (மே 10) பதிவு செய்த நிலையில், குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நிலையில், சவுக்கு சங்கர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்த ஆவணங்களை கோவை மத்திய சிறை அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது.

அவதூறு வழக்கில் யூ-டியூபா□ சவுக்கு சங்கரை நேர்காணல் செய்து தனது யூ-டியூப் சேனலில் ஒளிபரப்பிய பெலிக்ஸ் ஜெரால்டு மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரி திருச்சியிலும் பெண் போலீஸா□□ புகார் அளித்திருந்த நிலையில், சவுக்கு சங்கரைத் தொடா□ந்து யூ-டியூபா□ பெலிக்ஸ் ஜெரால்டும் நேற்று (மே 11) கைது செய்யப்பட்டார்.

முன்னதாக இனி யூடியூப்பில் கடுமையான பிரச்னை ஏற்படுத்துவது போன்ற கருத்துக்களை தெரிவிக்க மாட்டேன், யார் மனதையும் புண்படுத்தும் வகையில் இனிமேல் பேச மாட்டேன் என்று சவுக்கு சங்கர் நீதிபதியிடம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

அமீர், இமான், அண்ணாச்சி, ராஜ்கபூர், ஆனந்தராஜ், கஞ்சா கருப்பு கூட்டு சேர்ந்து வயிறு வலிக்க சிரிக்க வைக்கும் "காதலுக்காக செய்யப்பட்ட அரசியல்" படம் 'உயிர்தமிழுக்கு'

சென்னை, 12 மே 2024: ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை பதம்னு சொல்லுவாங்க. அப்படித்தான் இயக்குனர் அமீரின் நடிப்பு. வடசென்னை படத்தில் ராஜன் கேரக்டரில் அவர் நடித்ததன் மூலமே எப்பேர்பட்ட நடிகர் என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அவருடைய நடிப்பில் உயிர் தமிழுக்கு படம் இன்று ரிலீஸ் ஆகி இருக்கிறது. சென்னையில் சைதாப்பேட்டை எம்.எல்.ஏ அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் கொல்லப்படுகிறார். ஆனால், அவரது மரணத்திற்கு காரணம் அந்த எம்.எல்.ஏ - விற்கும் ஆளும் கட்சி மாவட்ட செயலாளரான பாண்டியனுக்கும் இடையே உள்ள விரோதம்தான் என ப்பரவலாக பேசப்படுகிறது. யார் இந்த பாண்டியன்? அவருக்கும் இந்த கொலைக்கும் என்ன சம்மந்தம்? போன்ற விஷயங்களை சொல்வதே' உயிர்தமிழுக்கு' படம்.

கதர் சட்டை, கதர் வேட்டியில் அமீர், படம் பெயர் உயிர் தமிழுக்கு என்ற உடன் தமிழை பற்றி பேசி கொலையா கொல்லப் போறாங்கன்னு நெனச்ச எல்லோருடைய எண்ணமும் போயிடுச்சு. படத்தில் ஹீரோயினாக நடித்திருக்கும் சாந்தினியின் பெயர் தமிழ்ச்செல்வி.

அப்போ உயிர் தமிழுக்கு என்று சொன்னால் என்ன அர்த்தம் என்று புரிகிறதா. அரசியல் ஆட்டத்தில் நிறைய காதல் கதைகளை பார்த்திருப்போம்.. ஆனால் இந்த படம் காதலுக்காக செய்யப்பட்ட அரசியல். இந்தப் படத்தில் இமான் அண்ணாச்சி, ராஜ்கபூர், ஆனந்தராஜ், சரவண சக்தி, மகாநதி சங்கர், சுப்பிரமணியம் சிவா, கஞ்சா கருப்பு ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

கேபிள் ஆபரேட்டராக இருக்கும் பாண்டியன் தன்னுடைய காதலிக்காக அரசியல்வாதியாக ஆவது தான் கதை. காதலிக்காக கண்டன பொதுக்கூட்டம், நன்றி அறிவிப்பு கூட்டம் என கலக்குகிறார் அமீர். படத்தின் பெரிய பிளஸ் இந்த காலத்து அரசியலை வச்சு செய்வதுதான்.

சமாதி முன் தியானம், ஓட்டு மிஷினை நம்பிய அரசியல் செய்வது, நடிகர்கள் அரசியலுக்கு வருவது என எல்லா கான்செப்ட்டையும் உள்ளே கொண்டு வந்து வயிறு குலுங்க சிரிக்க வைத்திருக்கிறார் இயக்குனர் ஆதம் பாவா.

சாந்தினியின் அப்பா இறந்து போக அந்த கொலை பழி அமீரின் மீது விழுகிறது. அதிலிருந்து அவர் தப்பித்து எப்படி வெளியே வருகிறார், சாந்தினி உடன் எப்படி இணைகிறார் என்பதுதான் படத்தின் கதை. படத்தின் முதல் பாதி அரசியல் நையாண்டியை மையப்படுத்தி வயிறு குலுங்க சிரிக்க வைத்திருக்கிறது.

இரண்டாவது பாதி கவலை மறந்து சிரித்து விட்டு வரலாம். அமீருக்குள் இருக்கும் யதார்த்த நடிகன் திரையில் மக்களை சிலிர்க்க வைத்திருக்கிறார்.

ஊடகத்துறை ஜாம்பவான்கள் உருவாக்கியுள்ள புதுமையான கதை சொல்லும் செயலியும் ஆடியோ ஒ டி டி-யுமான ரேடியோ ரூம்

சென்னை, 12 மே 2024: ரீஜனல் ஸ்டோரி டெல்லர்ஸ் குழுமத்தின் தலைவர் ஏ எல். வெங்கடாசலம் எனும் வெங்கிக்கு ஊடக வட்டாரங்களில் அறிமுகம் தேவையில்லை. விஜய் தொலைக்காட்சி மற்றும் புது யுகம் தொலைக்காட்சிகளில் தலைவராக இருந்த இவர், சுயாதீன தயாரிப்பாளராகவும் இயக்குநராகவும் தரமான பல நிகழ்ச்சிகளை உருவாக்கியவர் ஆவார். வெங்கியின் பரந்த அனுபவத்தினாலும் சீரிய திறமையினாலும் ரேடியோ ரூம் என்ற புதிய முன்முயற்சி உருவாக்கப்பட்டுள்ளது. ரீஜனல் ஸ்டோரி டெல்லர்ஸ் குழுமத்தின் புதுமையான கதை சொல்லும் செயலியும் ஆடியோ ஒ டி டி-யுமான ரேடியோ ரூம் செயலி சென்னையில் பிரம்மாண்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பிரபல எழுத்தாளர் ராஜேஷ்குமார், இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா, இயக்குநர் சசி, இயக்குநர் ஸ்டான்லி, இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் மற்றும் நடிகர் ஜான் விஜய் உள்ளிட்ட பல்வேறு திரை பிரபலங்கள் கலந்து கொண்டனர். சுவாரசியமான, ஆழ்ந்து போக வைக்கக்கூடிய அதீத கதைக் கேட்கும் அனுபவத்தை கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட ரேடியோ ரூம், வெறும் ஆடியோ புத்தகம் மட்டுமே அல்ல. கதைகளும், நாவல்களும் ஆடியோ நாடகங்களாக மாற்றப்பட்டு பொருத்தமான குரல்கள், இதற்காகவே உருவாக்கிய இசை மற்றும் சிறப்பு சப்தங்கள் சேர்க்கப்பட்டு சிலிர்க்க வைக்கும் கேட்கும் அனுபவத்தை ரேடியோ ரூம் வழங்கும்.

ரேடியோ ரூம் செயலியில் பழம்பெரும் எழுத்தாளர்களின் கதைகளும், நடுத்தர கால மற்றும் சமகால எழுத்தாளர்களின் படைப்புகளும் உள்ளன. அறிமுக மற்றும் இளம் எழுத்தாளர்களின் கதைகளும் அரங்கேற இங்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

ரேடியோ ரூமில் தற்சமயம் தமிழ் கதைகளும் ஈழத் தமிழ் கதைகளும் இடம் பெற்றுள்ளன. தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட கதைகளும் தயாரிப்பில் உள்ளன. விரைவில் இந்திய மொழிகளில் மராத்தி மற்றும் வங்காள கதைகளும், பன்னாட்டு மொழிகளில் ஸ்பேனிஷ், போர்த்துகீசிய மற்றும் ஜெர்மானிய கதைகளும் அறிமுகப்படுத்தப் படவுள்ளன. ரேடியோ ரூமில் பலவகையான கதைகள் - செந்தரம், குற்றம், காதல் மற்றும் குழந்தைகளுக்கான கதைகள் உள்ளன. புனை கதை அல்லாத பிரிவுகளில் உடல் நலம், ஆரோக்கியம், பயணம் மற்றும் ஆன்மீகம் உள்ளிட்ட தலைப்புகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

வெங்கியின் இடைவிடாத மற்றும் அயராத முயற்சியாலும் விஜய் ரெட்டி, மௌனிகா ரெட்டி ஆகியோரின் உறுதுணையாலும் இன்று உருவாகி நிற்கிறது ரேடியோ ரூம். தளம் உருவாக்குவதிலும் புதுமைகளை செயல்படுத்துவதில் புகழ்பெற்ற லைட்டஸ் டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் ரேடியோ ரூம் கைகோர்த்துள்ளது. அர்த்தமுள்ள கதைகளையும் கருத்துகளையும் உருவாக்கும் உத்தரவாதத்துடன் கதைகளின் உலகை மேலும் அழகாக்க போகும் இந்த இரு குழுமங்களும் வெகு விரைவில் வீடியோ ஒ டி டி மற்றும் ஆன்லைன் தொலைக் காட்சியையும் அறிமுகப்படுத்தவிருக்கிறார்கள். உற்சாகமும் எதிர்பார்ப்பும் பொங்கட்டும். கேளிக்கை உலகில் புதுமைகள் மலரட்டும்.

அமீர் தன்னை விமர்சித்த நிலையிலும் 'உயிர் தமிழுக்கு' படத்தை லண்டனில் பார்த்து பாராட்டிய லைக்கா சுபாஸ்கரன்

சென்னை, 12 மே 2024: இயக்குநர் அமீர் கதாநாயகனாக நடித்து நேற்று (மே-10) வெளியாகியுள்ள படம் 'உயிர் தமிழுக்கு'. ஆன்டி இண்டியன் படத்தை தயாரித்த மூன் பிக்சர்ஸ் தயாரிப்பாளர் ஆதம்பாவா இந்தப்படத்தை தயாரித்துள்ளதுடன் இயக்குநராகவும் அடியெடுத்து வைத்துள்ளார். அரசியல் பின்னணியில் உருவாகியுள்ள இந்தப்படத்தில் கதாநாயகியாக சாந்தினி ஸ்ரீதரன் நடித்துள்ளார். முக்கிய வேடங்களில் இமான் அண்ணாச்சி, சரவண சக்தி, கஞ்சா கருப்பு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஒரு சிறிய இடைவெளிக்கு பிறகு இப்படம் மூலம் வெற்றிகரமாக ரீ-என்ட்ரி கொடுத்துள்ளார் இசையமைப்பாளர் வித்யாசாகர்.

அரசியல் பின்னணியில் உருவாகி உள்ள இந்த படத்தில் அமீர் கதாநாயகனாக நடித்திருக்கிறார் என்பதால் படம் குறித்து ரிலீசுக்கு முன்பிருந்தே எதிர்பார்ப்பு அதிகம் இருந்தது. தற்போது படம் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பு பெற்று வருகிறது

இந்த நிலையில் தற்போது லைக்கா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் லண்டனில் 'உயிர் தமிழுக்கு' படத்தை பார்க்க விரும்புவதாக படத்தின் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் ஆதம்பாவாவிடம் மின்னஞ்சல் மூலமாக செய்தி அனுப்பினார் இதனைத் தொடர்ந்து லண்டனில் அவருக்காக சிறப்பு காட்சி ஒன்று திரையிட ஏற்பாடு செய்யப்பட்டது. படம் பார்த்துவிட்டு நன்றாக இருக்கிறது என தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார் திரு. சுபாஸ்கரன்.

சுபாஸ்கரன் தானாகவே முன்வந்து 'உயிர் தமிழுக்கு' படத்தை பார்க்க விரும்பியதும் படம் பார்த்துவிட்டு பாராட்டியதும் மிகவும் ஆரோக்கியமான விஷயம் என்று கூறினார் படத்தின் இயக்குநரும் தயாரிப்பாளருமான ஆதம் பாவா.

நடிகர் மோகன் பிறந்த நாள் மற்றும் 'ஹரா' திரைப்பட இசை வெளியீட்டு விழா ஜூன் 7ம் தேதி தமிழகம் எங்கும் எல்மா பிக்சர்ஸ் வெளியீடு

சென்னை, 12 மே 2024: தமிழ் திரையுலகில் அதிக எண்ணிக்கையில் வெள்ளிவிழா படங்கள் தந்தவரும் தமிழகமெங்கும் மிகப்பெரும் ரசிகர் பட்டாளத்தைக் கொண்டவருமான நடிகர் மோகனின் பிறந்த நாளில், அவர் நடிப்பில் உருவாகியிருக்கும் 'ஹரா' படத்தின் இசை வெளியீட்டு விழா ரசிகர்கள் மத்தியில் படக்குழுவினர் மற்றும் திரைப்பிரபலங்கள் கலந்து கொள்ள கோலாகலமாகக் நடைபெற்றது. ரஷாந்த் அர்வின் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். திரைத்துறையிலிருந்து பல பிரபலங்கள் கலந்துகொண்டு நடிகர் மோகனுக்கு பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்தனர். ரசிகர் மன்றம் சார்பில் நடிகர் மோகன் தனது கையால் பல ஏழை பள்ளி மாணவர்களுக்கு பள்ளிக்கு தேவையான பை, நோட்டுப் புத்தகம் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். மேலும் பல ஏழைப் பெண்களுக்குத் தையல் மெஷின் முதலான உதவிப் பொருட்களை வழங்கினார். கோயம்புத்தூர் எஸ் பி மோகன்ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெய ஸ்ரீ விஜய் தயாரித்துள்ள 'ஹரா' திரைப்படத்தை ஜூன் 7ம் தேதி தமிழகம் எங்கும் எல்மா பிக்சர்ஸ் வெளியிடுகிறது. ரசிகர்கள் மத்தியில் திரைப் பிரபலங்கள் முன்னிலையில் இவ்விழாவில் 'ஹரா' படத்தின் இசைத்தட்டு வெளியிடப்பட்டது. இந்நிகழ்வினில்...

நடிகர்-இயக்குநர் பாக்யராஜ் பேசியதாவதுஞ் இனிய நண்பர் மோகனுக்கு பிறந்த நாளான இன்று 'ஹரா' படத்தின் இசை விழாவை கொண்டாடுகிறார்கள். ரசிகர்கள் இங்கே குழுமியிருப்பது சந்தோஷம். மோகனுக்கும் எனக்கும் ரசிகர்களாகிய நீங்கள் தான் கடவுள். மோகன் பற்றி யாருக்கும் தெரியாத ஒரு விஷயம் ஒன்று உள்ளது. சினிமாவுக்கென சில பழக்கங்கள் இருக்கும், சம்பிரதாயங்கள் இருக்கும் ஆனால் அதில் எதிலும் மோகன் கலந்துகொள்ள மாட்டார். எப்போதும் தன் வேலையில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருப்பார். இன்றும் பாருங்கள் அவர் உடலை கட்டுக்கோப்பாக வைத்துள்ளார். பாடல்கள் தான் அவரது பலம், இளையராஜா முதல் டி ஆர் வரை பலர் இசையில் அவர் பாடல்கள் பல வெற்றி பெற்றுள்ளன. எத்தனையோ இசையமைப்பாளர்கள் இசையில் எத்தனையோ பேர் நடித்திருந்தாலும், மோகன் நடிக்கும் போது மட்டுமே பாடலை அவரே பாடுவது போல் இருக்கும். இந்த குணத்தை நான் நடிகர் திலகம் சிவாஜியிடம் பார்த்திருக்கிறேன், ஒரு ஹிந்தி நடிகரிடமும் பார்த்திருக்கிறேன். அவர்களுக்குப் பிறகு மோகன் தான் அதில் தன்னை நிரூபித்துள்ளார். இயக்குநர் விஜய் ஸ்ரீ ஜி வித்தியாசமான படங்கள் செய்து வருகிறார். சாருஹாசனை நாயகனாக்கி ஜெயித்தவர், நிகிலை நாயகனாக்கினார். இப்போது மோகனை மீண்டும் திரைக்குக் கொண்டுவந்துள்ளார். இந்தப் பாடல்களை பார்க்கும் போது படத்தில் மோகன் பட்டையைக் கிளப்புவார் எனத் தெரிகிறது. மோகனுக்குக் கண்டிப்பாக இப்படம் திருப்புமுனைப் படமாக இருக்கும். இந்த இசை விழாப் போல இந்தப்படத்தின் வெற்றி விழாவும் மிகப் பிரமாண்டமாக நடக்கும். அனைவருக்கும் என் வாழ்த்துகள். நன்றி. இயக்குநர் விஜய் ஸ்ரீ ஜி பேசியதாவது...

இந்த விழா இவ்வளவு சிறப்பாக நடக்கக் காரணம் மோகன் சார் ரசிகர்கள் தான். அனைவருக்கும் என் நன்றிகள். இந்தப்படம் எதைப்பற்றிப் பேசுகிறது என்பது அடுத்த சில மாதங்களில் ரசிகர்களுக்குத் தெரிந்து விடும். இந்தப்படத்தில் உழைத்த அனைத்து கலைஞர்களும் தங்கள் உயிரைத் தந்து முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றி உள்ளார்கள். இந்தப் படத்திற்காக யாரைக் கூட்டி வந்தாலும், மோகன் சார் அவர்கள் பிரபலமானவர்களா என்றெல்லாம் பார்க்க மாட்டார், அவர்களின் திறமையை மட்டுமே பார்ப்பார். இந்தப் பாடல்கள் எல்லாம் கடினமான சூழ்நிலைகளுக்கு இடையில் தான் உருவானது. இந்தப் படம் அவரை வேறு மாதிரியாகக் காட்டும். நான் விபத்தில் இருந்து திரும்பி வந்ததே அவரால் தான். ஆக்ஸிடெண்டுக்கு பிறகு எனக்காக ஒரு ஷெட்யூல் ரெடி செய்தார். அந்த மனது அவருக்குத் தான் வரும். முழுக்க முழுக்க எனக்காக அதைச் செய்தார். மோகன் சாரின் வெற்றிக்குக் காரணம் அவரது நடிப்பு தான், அதைத் திரும்ப ரசிகர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டுமென்று நினைத்துத் தான் இப்படத்தை எடுத்தேன். :ஹரா' வெல்லும், அதற்கு மிகப்பெரிய காரணம் மோகன் சார் ரசிகர்கள் தான். அனைவருக்கும் நன்றி. நடிகர் மோகன் பேசியதாவதுஞ்.

எத்தனை தடவை ரசிகர்களுக்கு நன்றி சொல்வது எனத் தெரியவில்லை. உங்களுக்கு நான் காலமெல்லாம் கடன் பட்டிருக்கிறேன். நான் நடித்தாலும், இல்லையென்றாலும் என் மீது அன்பு செலுத்தும் என் ரசிகர்களுக்கு நன்றி. ஏன் நடிக்கவில்லை எனப் பலரும் கேட்கிறார்கள். என்னைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும், எனக்குக் கதை பிடித்தால் மட்டுமே நான் நடிப்பேன். விஜய் ஸ்ரீ ஜி 7 முறை கதையைத் திருத்திய பிறகு தான் இந்தப்படம் ஒத்துக்கொண்டேன். இந்தப்படத்திற்குக் கோவை மக்கள் கொடுத்த ஒத்துழைப்பு வியப்புக்குரியது, அத்தனை மக்களுக்கும் எங்கள் நன்றி. இந்தப்படத்தில் வேலை பார்த்த அனைவரும் பிரமாதமாகச் செய்துள்ளார்கள். இன்றைய 2கே கிட்ஸ் முதல் அனைவருக்கும் பிடிக்கும் படி, விஜய் □□ரீ ஜி படத்தை உருவாக்கியுள்ளார். இன்றைய நாயகன் இசையமைப்பாளர் ரஷாந்த் அர்வின். அருமையான பாடல்களை அவர் தந்துள்ளார். மகளைப் பற்றிய பாடல் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும். நேர்மையாக உண்மையாக ஒரு படத்தை உருவாக்கினால், எந்த காலத்திலும் வியாபாரம் இருக்கும் என்பதை இப்படம் நிரூபித்துள்ளது. டீசர் பார்த்துப் படத்தை வாங்க கோவை பிரதர்ஸ் முன் வந்துள்ளார்கள், மிகவும் பெருமையாக உள்ளது. உங்கள் ஆசீர்வாதத்தில் இந்தப்படம் ஜூன் 7ம் தேதி திரைக்கு வரும். கோவை பிரதர்ஸ் இப்படத்தை விநியோகிக்கிறார்கள். இந்தப்படம் எல்லோரையும் திருப்திப்படுத்தும் விதத்தில் இருக்கும், நன்றி.

'ஹரா' திரைப்படத்தில் அனு மோல், 'காலங்களில் அவள் வசந்தம்' புகழ் கௌஷிக், 'பவுடர்' நாயகி அனித்ரா நாயர், யோகி பாபு, சாருஹாசன், சுரேஷ் மேனன், வனிதா விஜயகுமார், மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி, தீபா, மைம் கோபி, சாம்ஸ் மற்றும் சந்தோஷ் பிரபாகர் உள்ளிட்ட ஏராளமான நடிகர்கள் நடித்துள்ளனர். ஒளிப்பதிவு: பிரகத் முனியசாமி, படத்தொகுப்பு: குணா.

இன்று உலக செவிலியர் தினம்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, 12 மே 2024: உலக செவிலியர் தினம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படுவதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:-

செவிலியர்களின் முன்னோடியான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் பிறந்தநாளான மே 12-ந்தேதி ஆண்டுதோறும் உலக செவிலியர் நாளாகக் கொண்டாடப்படுகிறது. கிரீமியப் போரின்போது காயமடைந்த வீரர்களைப் பராமரிப்பதில் நைட்டிங்கேல் அம்மையாரின் தன்னலமற்ற அர்ப்பணிப்பும், துணிவும் இன்றைய செவிலியர் சேவைக்கு அடித்தளமிட்டது. அதை நினைவுகூரும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

மருத்துவத்துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாகத் திகழ்வதில் நமது செவிலியர்களின் பங்கும் சேவையும் அளப்பரியது. கொரோனா பெருந்தொற்றின் போது அவர்கள் ஆற்றிய தன்னலமற்ற தொண்டை நாம் என்றும் மறக்கவியலாது. அத்தகைய செவிலியர்களின் தொண்டினைப் போற்றும் வகையில், நமது அரசு பொறுப்பேற்ற பின் அவர்கள் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1,412 ஒப்பந்த செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். ஒப்பந்த செவிலியர்களுக்கான ஊதியம் 14 ஆயிரம் ரூபாயிலிருந்து 19 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 1,912 ஒப்பந்த செவிலியர்கள் நிரந்தர செவிலியர்களாகப் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டத்தின் மூலம் 2,650 பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள் ஊக்கத் தொகையாக மாதம் ரூ.5,100 நிலையான ஊதியம் பெறுகின்றனர்.

வெளிப்படையான பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதல் கலந்தாய்வுகள் மூலம் 9,535 செவிலியர்கள் அவரவர் விரும்பிய இடங்களுக்கே பணிமாறுதல்கள் பெற்றுள்ளனர். செவிலியர்கள் பதவி உயர்வு பெறும் பொருட்டு செவிலியர் படிப்புகளின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பச்சிளங்குழந்தை பராமரிப்பு மற்றும் அதிதீவிர சிகிச்சை ஆகிய பிரிவுகளில் 'போஸ்ட் பேசிக் டிப்ளமோ' செவிலியர் பயிற்சிப் பிரிவுகள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்கள் நலனில் செவிலியர்களின் பெரும்பங்கினைப் பாராட்டி அவர்களின் தொண்டு மேன்மேலும் வளர, உலக செவிலியர் நாளில் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இஎம்சி லிமிடெட் - ஐ வாங்கியதற்கான பணம் செலுத்தல் செயல்முறையை வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கும் சலசார் டெக்னோ இன்ஜினியரிங்

SALASAR
Building a stronger future

சென்னை, 12 மே 2024: பொறியியல் மற்றும் உட்கட்டமைப்பு தீர்வுகளை வழங்கும் துறையில் ஒற்றை நிறுத்த தீர்வு வழங்குனராக சலசார் டெக்னோ இன்ஜினியரிங் லிமிடெட், முன்னணி நிறுவனமாக இயங்கி வருகிறது. ரயில்வே மற்றும் ஆற்றல் வழங்கல் துறைகளுக்கு டர்ன்கீ ஈபிசி சேவைகளை வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வரும் இந்நிறுவனம், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மோனோபோல்கள் மற்றும் பிற கனரக ஸ்டீல் கட்டமைப்புகளை வடிவமைத்து தயாரித்து வழங்கும் பணியையும் செய்து வருகிறது. 2024 மார்ச் 16 தேதியிட்டு, இந்நிறுவனம் வெளியிட்ட பத்திரிகை குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இஎம்சி (எக்ட்ரிக்கல் மேனுஃபேக்ச்சரிங் கம்பெனி லிமிடெட் என்று முன்பு அழைக்கப்பட்டது) லிமிடெட் - ஐ வாங்கியதற்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகையான ரூ.1680 மில்லியன் - ஐ சலசார் வழங்கி அச்செயல்முறையை நிறைவு செய்திருக்கிறது. சந்தையில் தனது செயலிருப்பையும், செயல்திறனையும் விரிவாக்கும் சலசார் - ன் தொடர்ச்சியான பயணத்தில் இஎம்சி லிமிடெட் - ஐ கையகப்படுத்தியிருப்பது ஒரு முக்கிய தருணமாகும். இது தொடர்பாக சலசார் நிறுவனத்தின் மேலாண்மைக் குழுவினர் கூறியதாவது: "இஎம்சி லிமிடெட் நிறுவனத்தை வாங்கியதற்காக செலுத்தப்பட வேண்டிய தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தி அதனை நிறைவு செய்திருப்பதை அறிவிப்பதில் நாங்கள் பெரும் உற்சாகம் கொண்டிருக்கிறோம். உத்தி வாய்ந்த முக்கியமான எமது விரிவாக்க பயணத்தில் இந்த கையகப்படுத்தல் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மைல்கல் நிகழ்வாகும். முழுத்தொகையையும் மிக விரைவாக செலுத்துவதில் நாங்கள் வெளிப்படுத்தியிருக்கும் எமது திறன், துல்லியமாகவும், விரைவாகவும் எமது செயல்திட்டங்களை செயலாக்கம் செய்வதில் எங்களது பொறுப்புறுதியை வலுவாக கோடிட்டுக் காட்டுகிறது. இந்நிறுவனத்தின் கையகப்படுத்தல் என்பது, வெறுமனே ஒரு பிசினஸ் பரிவர்த்தனையாக மட்டும் இருக்கவில்லை; பொறியியல் மற்றும் உட்கட்டமைப்பு தீர்வுகள் துறைக்குள் தொடர்புடைய பிற பகுதிகளிலும் வெளி நிறுவனங்களை கையகப்படுத்துவது மற்றும் இணைப்பதன் வழியாக எமது செயற்பரப்பை விரிவாக்கம் செய்வதில் எமது அர்ப்பணிப்பிற்கு சான்றாக திகழ்கிறது. இஎம்சி லிமிடெட் - ன் செயல்திறன்களை எமது இயக்க செயல்பாடுகளோடு ஒருங்கிணைப்பதன் வழியாக எமது சேவை வழங்கல்களை நாங்கள் விரிவுபடுத்தியிருக்கிறோம்; அதுமட்டுமின்றி எமது சந்தை அந்தஸ்தை வலுப்படுத்தி எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் எமது செயல்திறனையும் மேம்படுத்தியிருக்கிறோம். இந்நிறுவனத்தை கையகப்படுத்துவது என்ற எமது முடிவு, எங்களது நீண்டகால உத்திவாய்ந்த முக்கிய குறிக்கோள்களுக்கு மிகவும் இணக்கமானதாக இருக்கிறது. இபிசி தொழில்பிரிவின் வளர்ச்சி சாத்தியம் மீது நாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள விரிவாக்கத்திற்கு எமது தொலைநோக்கு திட்டத்தையொட்டிய நல்ல வாய்ப்புகளை தவற விடாமல் திறம்பட பயன்படுத்துவதை எமது தயார்நிலையையும் இந்நடவடிக்கை பிரதிபலிக்கிறது. இஎம்சி லிமிடெட் நிறுவனத்தின் கையகப்படுத்தலுக்காக பணம் செலுத்தலை வெற்றிகரமாக நிறைவு செய்திருப்பது, எமது அக்கறைப் பங்காளர்களுக்கு மதிப்பை உருவாக்குவதில் எமது தளராத மனஉறுதிக்கு ஒரு சான்றாகும். இந்த முக்கியமான முதலீட்டு நடவடிக்கை, குறிப்பிடத்தக்க ஆதாயப்பலன்களை வழங்கும் என்றும் மற்றும் பொறியியல் மற்றும் உட்கட்டமைப்பு தீர்வுகள் துறையில் முதன்மை நிறுவனமாக எமது நிலையை மேலும் வலுப்படுத்தும் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். வளர்ச்சியின் புதிய அத்தியாயத்தை தொடங்கியிருக்கும் இத்தருணத்தில், புத்தாக்கத்தை முன்னெடுக்கவும், நேர்த்தியான சேவையை வழங்கவும், நிலைப்புத்தன்மையுள்ள வெற்றியை அடையவும் எமது ஒருங்கிணைந்த பலங்களை சிறப்பாக பயன்படுத்துவது மீது நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம். இனிவரும் காலங்களில் நாங்கள் எதிர்கொள்ளவிருக்கும் வாய்ப்புகள் மற்றும் சாத்தியங்கள் குறித்து பெரும் உற்சாகம் கொண்டிருக்கும் நாங்கள் இனிவரும் ஆண்டுகளில் இந்த கையகப்படுத்தல் நடவடிக்கையின் முழுப்பலனையும் அடைவதை ஆவலோடு எதிர்நோக்குகிறோம்."

பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மீட்கப்படும் மோடி பிரதமராக இருந்தால்தான் நாடு பாதுகாப்பாக இருக்கும் - மத்திய அமைச்சர் அமித்ஷா

சென்னை, 12 மே 2024: பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் கண்டிப்பாக மீட்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

மோடி பிரதமராக இருந்தால்தான் நாடு பாதுகாப்பாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

தெலுங்கானாவின் விகாராபாத்தில் பாஜக சார்பில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியதாவது:

இந்திய பாதுகாப்பு குறித்து தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி ஏளனமாக பேசி வருகிறார். நம் நாட்டின் பாதுகாப்பு மிக முக்கியம். எதிரி நாட்டின் மீது போர் தொடுக்கும் தைரியம் காங்கிரஸுக்கு உள்ளதா?

அத்துமீறி நமது நாட்டின் எல்லையில் நுழையும் எதிரி நாட்டினரை நம்முடைய ராணுவ வீரர்கள் துவம்சம் செய்துள்ளனர். அவர்களை ஓட ஓட விரட்டி அடித்துள்ளோம். 3-வது முறையாக மோடி பிரதமர் பதவியேற்றதும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி கண்டிப்பாக மீட்கப்படும்.

காஷ்மீர் என்றென்றும் நம்முடைய நாட்டின் ஓர் அங்கம்தான். இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம். ஆனால், காங்கிரஸ் ஆட்சியில் தீவிரவாதிகள் காப்பாற்றப்பட்டு வந்தனர். ஆனால், தீவிரவாதத்தை பிரதமர் மோடி வேரோடு அழித்துள்ளார். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், ஹைதராபாத்தில் நேற்று மாலை நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் அமித் ஷா கூறியதாவது:

தெலுங்கானா மாநில பட்ஜெட், ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகி வந்துகொண்டே இருந்தது. ஆனால், பிஆர்எஸ் கட்சியின் 10 ஆண்டுகால ஆட்சியில் கடன் வாங்கும் நிலைமைக்கு தெலங்கானா தள்ளப்பட்டது. இது காங்கிரஸ் ஆட்சியிலும் தொடர்கிறது. மீண்டும் மத்தியில் பாஜக ஆட்சி கண்டிப்பாக அமையும்.

தெலுங்கானாவில் 10 எம்பி தொகுதிகளில் பாஜக வெற்றி பெறும். நாடு முழுவதிலும் நாங்கள் 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம். மோடி பிரதமராக இருந்தால்தான் நாடு பாதுகாப்பாக இருக்குமென மக்கள் நினைக்கிறார்கள்.

பாஜக மூத்த தலைவர்கள் பலருக்கு 75 வயதில் ஓய்வு அளிக்கப்பட்டது போல பிரதமர் மோடியும் அடுத்த ஆண்டு ஓய்வு பெறுவாரா என்று டெல்லி முதல்வர் கேஜ்ரிவால் கேள்வி எழுப்பி உள்ளார். 75 வயதில் ஓய்வு என்று பாஜகவில் எந்த வரையறையும் கிடையாது. பிரதமர் மோடி 75 வயதில் ஓய்வு பெற மாட்டார். அவர் தொடர்ந்து நாட்டை வழிநடத்துவார் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்திய ஆயுள் காப்பீடு நிறுவனங்கள் 2024-25 ஆம் நிதியாண்டை உற்சாகத்துடன் தொடங்கி உள்ளன; இவை, 2024 ஏப்ரலில் புதிய பிசினஸ் பிரீமியம்களில் 61.23% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை பதிவு செய்துள்ளன

Life Insurance Council
Together in service

சென்னை, 12 மே 2024: லைப் இன்சூரன்ஸ் கவுன்சில், வளர்ந்து வரும் இந்திய காப்பீட்டுத் துறையின் கவனத்தை ஈர்க்கும் வகையில், தொழில்துறையின் வணிக புள்ளி விவரங்களை இன்று வெளியிட்டுள்ளது. இதில், இந்திய ஆயுள் காப்பீடு நிறுவனங்களின் புதிய பிசினஸ் பிரீமியம் (என்பிபி) 61.23% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை எட்டி இருப்பதாக குறிப்பிட்டுள்ளது. இது, மக்களிடையே ஆயுள் காப்பீட்டு பாலிசிகளின் வளர்ந்து வரும் தேவையை எடுத்துக்காட்டுகிறது. இந்திய ஆயுள் காப்பீட்டாளர்களின் என்பிபி ஏப்ரல் 2023 இல் ரூ.12,565.31 கோடியாக இருந்த நிலையில், ஏப்ரல் 2024 இல் ரூ.20,258.86 கோடியாக அதிகரித்துள்ளது.

லைப் இன்சூரன்ஸ் கவுன்சில் தரவுகளின்படி, ஆயுள் காப்பீட்டுத் துறையானது, ஏப்ரல் 2024 இல் அதன் என்பிபி வசூல் ரூ.20,258.86 கோடியாக 61%-க்கும் அதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த வளர்ச்சிக்கு, குரூப் சிங்கிள் பிரீமியம் 126%-க்கும் அதிகமாக வளர்ச்சி அடைந்தது முக்கிய காரணமாகும். தனிநபர் சிங்கிள் பிளான் பாலிசிகளின் விற்பனை எண்ணிக்கை 19% வளர்ச்சியையும், நான்-சிங்கிள் பிளான்கள் 10% வளர்ச்சியையும் எட்டி உள்ளன.

நிதியாண்டின் முதல் மாதத்திற்குள் 49,205 ஆயுள் காப்பீட்டு முகவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். இது விருப்பமான வேலைவாய்ப்பாக காப்பீட்டுத் துறை பிரபலமடைந்து வருவதை குறிக்கிறது. ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல்மயமாக்கலின் விரைவான வேகத்தால் இந்த அதிகரிப்பு சாத்தியமாகி உள்ளது. இது துறையின் வளர்ச்சிக்கு மேலும் உதவுவதோடு நாடு முழுவதும் காப்பீடு தொழில் பரவலாக்குவதை ஆழப்படுத்தவும் உதவும்.

'ஒரே நாடு, ஒரே தலைவர்' என்பதே மோடியின் நோக்கம் இந்தியா கூட்டணி ஆட்சி அமைப்பது உறுதி: டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் பிரச்சாரம்

சென்னை, 12 மே 2024: 'ஒரே நாடு, ஒரே தலைவர்' என்பதுதான் பிரதமர் மோடியின் நோக்கம் எனக்கூறிய கெஜ்ரிவால், இந்தியா கூட்டணி ஆட்சி அமைப்பது உறுதி என்றும் தெரிவித்தார்.

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் இடைக்கால ஜாமீன் பெற்று திகார் சிறையில் இருந்து நேற்று முன்தினம் வெளியே வந்த டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால், தேர்தல் பணிகளை நேற்று தொடங்கினார்.

காலையில் டெல்லி கன்னாட் பிளேசில் உள்ள அனுமன் கோவிலில் வழிபட்ட அவர், பின்னர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அதன்படி மெராலி பகுதியில் வாகன பேரணியாக சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

முன்னதாக டெல்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகம் சென்ற அவர், அங்கே கூடியிருந்த கட்சித்தொண்டர்கள் மத்தியில் பேசினார். அப்போது பிரதமர் மோடிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு கடந்த 20 மணி நேரமாக நான் தேர்தல் நிபுணர்கள் மற்றும் பொதுமக்களிடம் பேசி வந்தேன். அதன் மூலம் மத்தியில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரப்போவதில்லை என்பதை அறிந்தேன். ஜூன் 4 ந்தேதி இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும்.

டெல்லியில் அடுத்து அமையும் அரசில் ஆம் ஆத்மியும் அங்கம் வகிக்கும். அதன் மூலம் டெல்லிக்கு முழு மாநில அந்தஸ்து பெறப்படும்.

இந்தியா கூட்டணியின் பிரதமர் முகம் குறித்து பா.ஜ.க.வினர் கேட்கின்றனர். ஆனால் உங்கள் பிரதமர் யார்? என பா.ஜ.க.வுக்கு நான் கேட்கிறேன். ஏனெனில் மோடிஜி அடுத்த ஆண்டு செப்டம்பர் 17-ந்தேதியுடன் 75 வயது ஆகிவிடும்.

மோடி ஓய்வு பெறுவாரா?

பா.ஜ.க.வில் ஓய்வு பெறும் வயது 75 என அவர்தான் சட்டம் கொண்டு வந்திருந்தார். அதன் அடிப்படையில் தான் எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, சுமித்ரா மகாஜன் ஆகியோரை ஓய்வு பெற வைத்தனர்.

அதன்படி மோடி அடுத்த ஆண்டு ஓய்வு பெறுவார். எனவே அமித்ஷாவை பிரதமராக்குவதற்காகத்தான் மோடி ஓட்டு கேட்கிறார். மோடிஜியின் உத்தரவாதத்தை அமித்ஷா நிறைவேற்றுவாரா?

தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றால் மம்தா பானர்ஜி, தேஜஸ்வி யாதவ், மு.க.ஸ்டாலின், பினராயி விஜயன் மற்றும் உத்தவ் தாக்கரே உள்ளிட்ட எதிர்க்கட்சி தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

மிகவும் ஆபத்தான ஒரு திட்டத்தை பிரதமர் தொடங்கி இருக்கிறார். ஒரே நாடு, ஒரே தலைவர் என்பதுதான் அந்த திட்டம். நாட்டின் அனைத்து தலைவர்களையும் ஒழித்து விட மோடி விரும்புகிறார். எதிர்க்கட்சி தலைவர்கள் என்றால் சிறைக்கு அனுப்பப்படுவர். பா.ஜ.க. தலைவர்களின் அரசியலுக்கு முடிவுரை எழுதப்படும். அந்தவகையில் அவர்கள் வெற்றி பெற்றால் பா.ஜ.க. தலைவர்களுக்கே சிக்கல்தான்.

எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, சுமித்ரா மகாஜன் ஆகியோரை அரசியல் ரீதியாக முடக்கினர். மத்திய பிரதேச தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் சிவராஜ் சிங் சவுகானின் அரசியலை முடிவுக்கு கொண்டு வந்தனர். அவரை முதலமைச்சராக்கவில்லை.

வசுந்தரா ராஜே, கட்டார், ராமன்சிங் ஆகியோருக்கும் இந்த நிலைதான். அடுத்து யோகி ஆதித்யநாத் தான். நாடாளுமன்ற தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றால் 2 மாதங்களில் உத்தரபிரதேச முதலமைச்சர் மாற்றப்படுவார். இதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

பதவியில் இருந்து அகற்ற சதி

இந்த ஒரே நாடு, ஒரே தலைவர் என்பது ஒரு சர்வாதிகாரப்போக்கு. ஒரேயொரு சர்வாதிகாரிதான் நாட்டில் மிஞ்சியிருப்பார். இதைத்தான் கொண்டு வர மோடி விரும்புகிறார்.

என்னை பொறுத்தவரை முதலமைச்சர் பதவி முக்கியம் இல்லை. ஆனால் இந்த பதவியில் இருந்து விலக மாட்டேன். ஏனெனில் பொய் வழக்கு மூலம் என்னை பதவியில் இருந்து அகற்ற சதி நடக்கிறது.

நாட்டில் உள்ள பெரிய திருடர்கள் மற்றும் கொள்ளையர்களை தனது கட்சியில் சேர்த்து விட்டு, ஊழலை எதிர்த்து போராடுவதாக பிரதமர் கூறுகிறார்.

ஆனால் ஊழலை எதிர்த்துப் போராடுவதைப் பற்றி கெஜ்ரிவாலிடம் இருந்து அவர் கற்றுக்கொள்ள வேண்டும். ஊழல்வாதிகளை நாங்கள் சிறைக்கு அனுப்பி இருக்கிறோம். எங்கள் மந்திரிகளை கூட அனுப்பினோம். இவ்வாறு கஜ்ரிவால் கூறினார்.